பாடம் 3

# 3. விண் வழங்கும் பெருஞ்சுடர்கள்

**வாசிப்போம் தொடக்கநூல் 1: 14 -19**

குமார் : அப்பா! இன்று நான் ஒரு அழகான திருவிவிலியப் பகுதியை வாசித்தேன்.

அப்பா : எங்கே, எங்களுக்கும் அதை வாசித்துக் காட்டு! கேட்போம்.

**மனனம் செய்வோம்**
**திருப்பாடல் 136:7-9**

பெரும் சுடர்களை உருவாக்கியவர்க்கு நன்றி செலுத்துங்கள்; என்றும் உள்ளது அவரது பேரன்பு. பகலை ஆள்வதற்கெனக் கதிரவனை உருவாக்கியவர்க்கு நன்றி செலுத்துங்கள்; என்றும் உள்ளது அவரது பேரன்பு. இரவை ஆள்வதற்கென நிலாவையும் விண்மீன்களையும் உருவாக்கியவர்க்கு நன்றி செலுத்துங்கள்; என்றும் உள்ளது அவரது பேரன்பு.

கமலா : பெருஞ்சுடர்கள் எவை குமார்? இவற்றை உருவாக்கியவர் யார்?

குமார் : பெருஞ்சுடர்கள், சூரியனும் சந்திரனுமாகும். இவற்றையும். விண்மீன்களையும், கடவுள் தம் வார்த்தையினால் உருவாக்கினார்.

ரவி : அது மாத்திரமல்ல, இவ் ஒளிர்வன மானிடரின் மீது கடவுள் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடாக அமைகிறது.

அப்பா : ஆம்! சூரியன், சந்திரன், விண்மீன்களினூடாக மானிடரும், உயிரினங்கள் அனைத்தும் வலுவூட்டப்படுகின்றன. மிகுந்த பயன்களையும் பெறுகின்றன.


கமலா : அப்பா! சூரியன், சந்திரன், விண்மீன்களின் பயன்களை எமக்குச் சற்று கூறுங்கள்.

அப்பா : நீயும், ரவியும், குமாரும் சேர்ந்து இவற்றின் பயன்களைக் கண்டுபிடியுங்கள். அப்பொழுது கடவுளின் ஆற்றலையும், மனுக்குலம் மீது கொண்டுள்ள அன்பையும் உணர்ந்து கொள்வீர்கள்.

குமார் : அப்பா கூறுவது சரி. நான் சூரியனின் மகிமையைப் பற்றி தேடிப் பெறுவேன்.


ரவி : நான் சந்திரனின் மூலம், மானிடர் மேல் கடவுள் கொண்டுள்ள அன்பை ஆராய்வேன். கமலா! நீ விண்மீன்களால் உயிரினங்கள் பெறும் பயனைப் பற்றி எமக்கு கூறலாம்.

குமார், ரவி, கமலா ஆகியோர் பெற்ற தகவல்களைப் பார்ப்போம் :



## சூரியன்

| | |
|---|---|
| காலையில் உதித்து இருளை அகற்றி ஒளியை தருகிறது. | மானிடர், மற்றும் அனைத்து உயிரினங்களின் துயில் போக்கி – உலகுக்கு புத்துயிர் அளிக்கிறது. இரவு பகலை வேறுபடுத்துகிறது. |
| சூரிய ஒளி உள்ள போது – மானிடரும், மற்றைய உயிரங்கிகளும் சிறப்பாகத் தொழில்படுகின்றன. | மானிடர் பல்வேறு தொழில் செய்கிறார்கள். பறவைகள், இரை தேடிப் பறக்கின்றன. பூக்கள் மலர்கின்றன. |
| ஒளி படும் தாவரங்கள் நற்பலன்களைத் தருகின்றன. | தாவரங்கள் வளரவும், உணவு தயாரிக்கவும் ஒளிச் சக்தியினை சூரியன் வழங்குகிறது. தாவரம் தயாரிக்கும் உணவில் ஏனைய உயிரினங்கள் தங்கியுள்ளன. |
| ஒளி படாத தாவரம், புல் வகை வெளிறுகிறது. | சூரிய ஒளி படும்போது தாவர இலைகளில் உள்ள பச்சையம் பேணப்பட்டு சூழலுக்கு பசுமை ஊட்டப்படுகிறது. |
| சூரிய ஒளி காலையில் தம் மீது பட மானிடர் விரும்புகின்றனர். | சூரிய ஒளியிலிருந்து உடலுக்குத் தேவையான விட்டமின் டி தயாரிக்கப்படுகிறது. |
| சூரியன், ஒளிக்கதிருடன் வெப்பத்தையும் வெளியிடுகிறது. | சுற்றாடல் உயிர்வாழ்வதற்கு ஏற்ற வெப்பதட்பம் பெறுகிறது. பொருட்களை உலர்த்தவும், கடல் நீரிலிருந்து உப்பு பெறவும் சூரிய வெப்பம் உதவுகிறது. |
| சூரிய வெப்பத்தால் பல இயற்கை நிகழ்வுகள் ஏற்படுகின்றன. | சூரிய வெப்பத்தால் நீர் வட்டம் நிகழ்கிறது. இவ்வெப்பம் கடல், தரை, காற்று வீச ஏதுவாகும். மீனவர் கடல் சென்று திரும்புவதற்கு காற்று உதவும். |
| சூரியன், சக்தி தீர்வாக அமைகிறது. | சூரிய சக்தியை மின் சக்தியாக மாற்றி, சக்தி நெருக்கடிக்கு செலவு குறைந்த தீர்வை ஏற்படுத்தலாம். |
| சூரியனைச் சுற்றி, புவி வலம் வருகிறது. | பருவகாலங்கள் , நாட்கள், ஆண்டுகள் குறிக்க உதவுகிறது. |




## சந்திரன்



- இரவு நேர வானில் தோன்றி நிலவொளியைத் தருகிறது.
- இரவை ஆள்வதற்குபடைக்கப்பட்டது. குளிர்ச்சியான ஒளிக்கதிர் சுகமான துயில் தரும்.
- சில பூக்கள் இரவில் மலர்கின்றன. சில விலங்குகள் இரவில் சஞ்சரிக்கின்றன.
- சந்திரன் தோன்றலின் போது மறைதலின் போது கடல் அலைகளில் மாற்றம் ஏற்படுகிறது. சந்திர ஈர்ப்பின் காரணமாக உயர், தாழ் அலைகள் மாலையிலும், காலையிலும் முறையே ஏற்படுகிறது,
- சந்திரனின் தோற்றத்தில் மாற்றம் ஏற்படுகிறது. தேய், வளர் பிறைகள், பௌர்ணமி அமாவாசை நிலவு தினங்களைக் கொண்டு நாள், மாதம், கணிக்கப்படுகிறது.
- குளிர்ச்சியான நிலவொளியைத் தருகிறது. பகல் கதிரவனால் சூடேறிய பாலை நிலம் போன்றன நிலவொளியினால் குளிர்ச்சியடைகிறது.

## விண் மீன்



- இரவு வானில், ஆயிரம் சிறு ஒளிச் சுடர்களாக மின்மினி ஒளிருகின்றன.
- ஆகாயப் பரப்பை அலங்கரிக்கின்றன. இரவிற்கு ஒளியைக் கொடுக்கின்றன.
- விண் மீன் கூட்ட தொகுதிகள் இரவு வானில் காட்சியளிக்கின்றன. உதாரணம் – தென் சிலுவை.
- இவ்விண்மீன் கூட்டங்களின் அமைவைக் கொண்டு திசைகளை அறியலாம். அடர்ந்த காட்டில் செல்வோர் பாலை நில வாசிகள் மாலுமிகள் ஆகியோர் திசைகளை அறிய உதவும்.

அப்பா : பிள்ளைகளே! மிகத்தெளிவாக, சூரிய, சந்திர, விண்மீன்களின் அளப்பரிய பயன்களைக் கூறினீர்கள்.
இவற்றையெல்லாம் ஏன் கடவுள் படைத்தார் எனக் கூறுவீர்களா?

கமலா : மானிடரும், ஏனைய உயிரினங்களும் பயன்பெறப் படைத்தார். எம்மில் கடவுள் வைத்த அன்பு எவ்வளவு பெரியது!

ரவி : ஆம், நாம் இப்படைப்புக்காக கடவுளுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அப்பா : அது மாத்திரமல்ல, இவ்வொளிச் சுடர்களைப்பேணி பாதுகாக்கும் கடமையும் உண்டு. கடவுள் இதனை நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

குமார் : பாதுகாப்பதா? நாம் எவ்வாறு ஒளிர்வனவற்றைப் பாதுகாக்கலாம்?

கமலா : குமார், அன்று நாம் போகும் போது, தொழிற்சாலை புகைபோக்கியிலிருந்து கரும் புகை வெளியேறியதைப் பார்த்தோமல்லவா! –இப்புகை, சூரிய ஒளிக்கதிரையே மறைத்து விட்டது.

ரவி : ஆம், மானிடர் செயல்பாட்டினால். வெளிவரும் வாயுப் புகைகள் ஒளிர்வனவற்றின் ஒளிக்கதிர்களைத் தடை செய்கின்றன. இச்செயல்களை நாம் தவிர்த்து பொறுப்புடன் நடக்க வேண்டும்.

அப்பா : நல்லது. நாமும் ஒளிர்வனவற்றின் பயன்களை மதித்து அவற்றைப் பயனுள்ள முறையில் பயன்படுத்துவோம். அவற்றைப் படைத்ததற்காக கடவுளுக்கு நன்றி செலுத்துவோம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

- **இயேசுவின் பிறப்பின் போது, பிரகாசமான விண்மீன் வானில் தோன்றியது.**
- **கடவுள் ஒளிவளம் – நாம் அவ்வொளியேந்திகள்.**
  **அவ்வொளியை நாம் பெற்று ஒளிர்வது – கிறிஸ்தவ சான்று வாழ்வு வாழ்வதாகும்.**
  **கடவுளின் ஒளியானது இருளை (பாவத்தை) நீக்கும்.**

## நினைவில் வைத்திருப்போம்

- பெருஞ் சுடர்கள், மனிதர் மேல் கடவுள் கொண்டிருக்கும் அன்பையும், பராமரிப்பையும் வெளிக்காட்டுகின்றன.
- ஒளிர்வன மூலம் மனுக்குலமும் அனைத்து உயிரினங்களும் வலுவூட்டப்படுகின்றன.
- மனிதரின் கடமை, கடவுளோடு இணைந்து ஒளிர்வனவற்றைப் பாதுகாத்தல் ஆகும்.

## செயற்பாடு

1. உமது சுற்றாடலில் சூரிய ஒளி உள்ளபோது நிகழும் செயற்பாடுகளை அவதானித்து பட்டியல் படுத்துக. இத்தொழிற்பாட்டால் மானிடருக்கு ஏற்படும் நன்மைகளை சகமாணவருடன் கலந்துரையாடுக.
2. "பெருஞ்சுடர்களை உருவாக்கியவர்க்கு நன்றி செலுத்துங்கள்" என்ற வாசகம் கொண்ட அழகான புத்தக அடையாள அட்டை (book mark) ஒன்றை செய்க
3. ஒளிர்வனவற்றை மதித்து அவற்றுக்காக கடவுளுக்கு நன்றி செலுத்தும் செபத்தை எழுதுக